**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .4/2023** | | |
| **PW/DW/CW** | : | **PW7** | | |
| **Name** | : | ரேகா | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | பிரேம்ஆனந்த் | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent petition filed and allowed )

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.02.2026

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது செக்காணூரணி காவல் நிலையத்தில் பெண் தலைமை காவலராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.06.2022 ம் தேதி 15.00 மணியளவில் உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நிலைய பாரா பொறுப்பில் இருந்த போது காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் உசிலம்பட்டி தேனி ரோடு நாஞ்சி நகரை சேர்ந்த மணிகண்டன் மனைவி நதியா என்பவர் வழங்கிய மனு ரசீது எண் 243/2022 யை பார்வையிட்டு புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 11/2022 பிரிவுகள் 498(a, 406, 294(b), 506(i) இதச படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகலையும் வாதியின் புகாரையும் இணைத்து உசிலம்பட்டி கனம் நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மற்ற நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அதன்பின்பு மற்றொரு நகலினை காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

புகார் எழுத்து பூர்வமாக தரப்பட்டதுள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் அவர்களின் உத்தரவு படி மனு எண் 243/2022 யை பார்வையிட்டு இந்த வழக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு ரசீதை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பவில்லை. நகைபோட்டதற்கோ பணம் கொடுத்ததற்கோ ஆதரமாக நகையின் புகைப்படம் மற்றும் நகை வாங்கியரசீது ஆகியவை புகாருடன் விசாரணையில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. ரூபாய் 15

லட்சம் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு ஆதரமாக ஆவணங்கள் எதுவும் புகாருடன் தாக்கல்செய்யப்பட்டதா என்றால் இல்லை. புகார்தாரரின் பெற்றோர்கள் தெலுங்கானா மாநிலத்தில் வாழ்கிறார்கள் என்றால் சரிதான். தேதியோ மாதமோ சொத்தை எழுதி வாங்க சொல்லி எதிரிகள் தொந்தரவு செய்தது குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 15.06.2022ம் தேதி அ.சா.1ன்னை எதிரிகள் வீட்டை விட்டு விரட்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 23.06.2022ம் தேதி தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணங்கள் முதல்தகவல் அறிக்கையின் காலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 15.06.2022 ம் தேதி புகார்தாரரை வீட்டை விட்டு விரட்டிய பிறகு அ.சா. 1 அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றார் என்றும் அல்லது வேறு உறவினர் வீட்டிற்கு சென்றார் என்றும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் உத்தரவிட்டதால் மனுவின் உண்மை தன்மையை பரிசீலனை செய்யாமல் அப்படியே வழக்காக பதிவு செய்தேன் என்றால் சரிதான்.

S.d. Reka
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.